**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 81** **நாள்: 07.06.2016**

**வளசரவாக்கம், ஆலந்தூர், பெருங்குடி, சோழிங்கநல்லூர் மண்டலப் பகுதிகளில் ரூ.13.70 கோடி செலவில் நவீன வசதிகளுடன் 7 பூங்காக்கள் அமைக்கும் பணி தீவிரம் !**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திரு. சைதை துரைசாமி அவர்கள் மற்றும் ஆணையாளர் டாக்டர்.பி.சந்தரமோகன், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் பெருநகர சென்னை மாநகராட்சி, மக்களுக்கான பல்வேறு அடிப்படை வசதிகள் மற்றும் கட்டமைப்பு பணிகளை சிறப்பாக செய்து வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள தெற்கு வட்டாரத்திற்குட்பட்ட வளசரவாக்கம், ஆலந்தூர், பெருங்குடி, சோழிங்கநல்லூர் மண்டலப் பகுதிகளில் ரூ.13.70 கோடி செலவில் 7 புதிய பூங்காக்கள் நவீன வசதிகளுடன் அமைத்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் கடந்த பிப்ரவரி மாதம் அடிக்கல் நாட்டினார்கள். அதையொட்டி, அப்பகுதிகளில் பூங்காக்கள் அமைக்கும் பணி, பூங்காக்கள் மேம்படுத்தும் பணி ஆகியவை வேகமாக நடைபெற்று வருகிறது.

ஆலந்தூர் மண்டலத்தில் கோட்டம்–156, திருவள்ளூர் நகர், நாதமுனி தெருவில் ரூ.1.76 கோடி மதிப்பில் பூங்காவை மேம்படுத்தும் பணி, சபரி நகரில் ரூ.49.99 இலட்சம் மதிப்பில் ஒரு பூங்காவும், பெருங்குடி மண்டலம், கோட்டம்–169, பாலாஜி நகர் 31 வது தெருவில் ரூ.49.99 இலட்சம் மதிப்பில் ஒரு புதிய பூங்காவும், கோட்டம்–191, ஜெயச்சந்திரன் நகர் முதல் பிரதான சாலையில் ரூ.47.09 இலட்சம் மதிப்பில் பூங்கா பசுமையாக்கும் பணிகள் மற்றும் மின்வசதிகள் செய்யும் பணிகளும், கோட்டம்–184, அண்ணா நெடுஞ்சாலை தெருவில் ரூ.3.08 கோடி மதிப்பில் புதிய பூங்கா ஒன்றும், நடைபாதை, குடிநீர் வசதி, சுற்றுச்சுவர் மற்றும் மின்வசதி ஆகிய பணிகளும், சோழிங்கநல்லூர் மண்டலம், கோட்டம்–193, துரைப்பாக்கம் ஆனந்தா நகர் பூங்காவில் ரூ.49.95 இலட்சம் மதிப்பில் சுற்றுச்சுவர், இறகுப்பந்து விளையாட்டுத்திடல், நடைபாதை, கழிவறைகள் அமைத்தல் ஆகிய பணிகளும், துரைப்பாக்கம், பாலமுருகன் கார்டன் 3வது பிரதான சாலையில் ரூ.98.66 இலட்சம் மதிப்பில் பூங்கா அமைத்தல், துரைப்பாக்கத்தில் ஆனந்தா நகர் பூங்காவில் மின்வசதி, பசுமை பணிகள், அமரும் இடங்கள், காவலர் கூடாரம் ஆகியவை ரூ.42.60 இலட்சம் மதிப்பிலும், கோட்டம்–198, தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய இடத்தில் பகுதி 1 மற்றும் 2 பூங்கா ரூ.2.99 கோடி மதிப்பில் அமைத்திட பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

வளசரவாக்கம் மண்டலத்தில் கோட்டம்–143, நொளம்பூர் 9வது பிரதான சாலையில் பேஸ்–1 பூங்கா அமைத்திட ரூ.84.92 இலட்சம் மதிப்பிலும், நொளம்பூர், 7வது குறுக்குத் தெருவில் ரூ.1.06 கோடி மதிப்பில் நவீன வசதிகளுடன் கூடிய பேஸ்–2 பூங்கா அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இப்பூங்காக்களில் சிறுவர்கள் விளையாடும் இடமும், நவீன வசதிகளுடன் கூடிய உடற்பயிற்சி உபகரணங்கள், யோகா மேடை, நடைபாதை, மாற்றுத்திறனாளிகள் செல்வதற்கு சாய்தளத்துடன் கூடிய நுழைவாயிலும், கழிப்பிட வசதி, இசை ஒலிப்பான்கள், பாதுகாவலர் அறை, மழைநீர் சேகரிப்புக்கான இடங்கள், பொதுமக்கள் குடிப்பதற்கான சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், வாகனம் நிற்கும் இடங்கள் மற்றும் காலநேரம் தெரிந்து கொள்வதற்கு டவர் கடிகாரம் ஆகியவை அமைக்கப்பட உள்ளது.

இப்பூங்காக்களில் லேகஸ்ட்டோவியம், சரக்கொன்றை, பூவரசு, வேம்பு, அரசமரம், பாதாம் மரம், மருத்துவ செடிகள் நடுவதற்கும் மற்றும் பசுமை புல்தரை அமைப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி,**